
# திராவிடத்தால் வாழ்கிறோம்

1147

எழுத்து: கோவி.லெனின்
ஓவியம்: கி.சொக்கலிங்கம்




- வாழ்வோம்

## மாநாடு

ர.பிரகாசு

107

**திராவிட இயக்கம் பயன்படுத்தும் ஆயுதங்களில் மிக முக்கியமானது, மாநாடு. அந்த மாநாடுகளின் வரலாற்றை வாரம் ஒன்றாக வாசிப்போம்...**




ஓவியம் : சிகரன்

# குழப்பத்தைப் போக்க, கூட்டப்பட்ட மாநாடு!

1944-இல் சேலம் மாநாட்டில், சுயமரியாதை இயக்கமும் நீதிக்கட்சியும் இணைந்து திராவிடர் கழகமாகப் பெயர் மாற்றம் பெற்றது. ஆனால், மதுரையில் என்.ராமநாதன், சாமி சிதம்பரனார், அ.பொன்னம்பலனார், சௌந்தரபாண்டியனார், வி.வி.ராமசாமி ஆகியோர் இணைந்து 'சுயமரியாதைச் சங்கம்' என ஓர் அமைப்பைப் பதிவு செய்ய முயன்றனர். இது மக்களிடையே குழப்பத்தை ஏற்படுத்தும் சூழலை உருவாக்கியது. இதற்கு, 14.07.1945 'குடிஅரசு' இதழில் " 'சுய மரியாதை இயக்கம்', 'ஜஸ்டிஸ் கட்சி' இரண்டும் தொண்டாற்றுகிறதாய்; அதாவது, கஷ்டப்பட்டு வேலை செய்ய வேண்டியவைகளாய் இருப்பதால், யாருடைய போலித்தன்மையும் போட்டித்தன்மையும் அவற்றுக்கு எவ்வித இடையூறும் விளைவித்துவிட முடியாது. ஆதலால், இயக்கப்பற்றுள்ள எவரும் குழப்பிக்கொள்ள வேண்டியதில்லை" என்று விளக்கினார் பெரியார்.

இதனையொட்டி, இந்தப் போலி சுயமரியாதைச் சங்க முயற்சியை முளையிலேயே கிள்ளி எறிந்து, குழப்பத்தைப் போக்கும் விதமாக 2.8.1945-இல் கரூர் தாலுகா சுய மரியாதை மாநாட்டை பெரியார் தொண்டர்கள் ஏற்பாடு செய்தனர். அம்பிகை டாக்கீசில், இம்மாநாடு நடைபெற்றது. காலை 9 மணிக்கு வாத்தியங்களுடன் தலைவர்கள் ஊர்வலமாக தியேட்டருக்கு அழைத்துச் செல்லப்பட்டனர். கரூர் திராவிட சாரண இயக்கத் தொண்டர்கள் அணிவகுத்து முழக்கங்கள் எழுப்பி, ஊர்வலத்தில் கலந்துகொண்டனர். மாநாட்டுக் கொட்டகையில், சுமார் 2,000 பேர் குழுமியிருந்தனர். நாமக்கல், இலால்குடி, மன்னார்குடி, கோயம்புத்தூர், குளித்தலை, தஞ்சாவூர் எனப் பல்வேறு பகுதிகளில் இருந்து திராவிடர் கழகத்தினர் இம்மாநாட்டுக்கு வருகை தந்திருந்தனர். திராவிடர் கழகத்தின் முக்கிய பிரதிநிதிகள் மட்டுமின்றி, கரூர் உயர்நிலைப் பள்ளி ஆசிரியர் மற்றும் மாணவர்கள், பரமத்தி வேலூர் கந்தசாமி கவுண்டர் உயர்நிலைப் பள்ளி ஆசிரியர் மற்றும் மாணவர்களும் மாநாட்டுக்கு வருகை புரிந்திருந்தனர்.

காலை 10 மணிக்கு வி.பார்த்தசாரதி கொடியேற்றி வைத்தார். அதைத் தொடர்ந்து, பேரறிஞர் அண்ணா மாநாட்டைத் தொடங்கிவைத்தார். என்.ரத்தினம் வரவேற்புரை ஆற்றிட, மாநாட்டுத் தலைவர் டி.பி.வேதாசலம் உரை நிகழ்த்தினார். பின்னர், பெரியாரின் உரையுடன் காலை நிகழ்ச்சிகள் முடிவுற்றன.

மதிய உணவுக்குப் பிறகு, மீண்டும் மாநாடு கூடியவுடன், பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. செங்கல்பட்டு, ஈரோடு, விருதுநகர் சுயமரியாதை மாநாட்டுத் தீர்மானங்கள் அப்படியே ஏற்கப்பட்டன. அடுத்து, திருச்சியில் நடக்கப்போகும் 4-வது சுயமரியாதைப் பொது மாநாட்டின் திட்டங்களில் ஒன்று அல்லது இரண்டையாவது, தீவிரமாய் செயல்படுத்துவதற்குத் தகுந்த அமைப்பு மற்றும் தொண்டர் படையை ஏற்படுத்த வேண்டும் என்று இம்மாநாடு வலியுறுத்தியது. 'திராவிட சமுதாயத்துக்கும் மனித தர்மத்துக்கும் மாறான கருத்துகளைப் புகுத்தும் சாஸ்திரம், புராணம், இதிகாசம், கலைப் படைப்புகள் ஆகியவற்றை மேற்கொண்ட தத்துவம் கொண்ட இசை, சித்திரம், நடிப்பு ஆகியவற்றையும் வெறுப்பதோடு, மக்கள் அவற்றை புறக்கணிக்க வேண்டும்' என்று இம்மாநாடு கேட்டுக் கொண்டது.

நான்காவது தீர்மானமாக, 'சுயமரியாதை இயக்கத்தை விட்டுப் போனவர்களும், இயக்கத்துக்கு விரோதமான செயல் புரிந்தவர்களுமாகிய சிலர் கூடி, சுயநல எண்ணத்துடன் சமீபத்தில், மதுரையில் சுயமரியாதைச் சங்கத்தைப் பதிவு (ரிஜிஸ்டர்) செய்துள்ள செயலைக் கண்டு, உண்மைச் சுயமரியாதைக் காரர்கள் அலட்சியம் செய்யவேண்டிய அவசியமில்லை என்றும், இயக்க வேலைகளில் இன்னும் தீவிர பங்குகொண்டு உழைக்க வேண்டும்' என்றும் தொண்டர்களை வலியுறுத்தும் வண்ணம் தீர்மானம் நிறைவேற்றப் பட்டது. இறுதியாகப் பேசிய பெரியார், இந்தத் தீர்மானத்தை விளக்கி, தொண்டர்களுக்குக் குழப்பத்தைப் போக்கும் வகையில், சுமார் ஒரு மணி நேரம் உரையாற்றினார்.

...கூட்டம் திரளும்

## சவாலை சமாளிக்கும் திட்டமில்லாத ஒன்றியம்!

மத்திய கிழக்கு நாடுகளில் நிலவி வரும் போர்ச்சூழல் காரணமாக, இந்தியாவில் எரிவாயு சிலிண்டர் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. ஏற்கெனவே வர்த்தகப் பயன்பாட்டுக்கான சிலிண்டர்கள் விநியோகம் முடங்கிய நிலையில், அதைச் சார்ந்த தொழில்கள் முடங்கும் நிலைக்குச் சென்றுள்ளன. இந்த நிலையில், தொழிற்சாலைகளுக்கான எரிபொருள் விலையேற்றத்தை அறிவித்து, மேலும் நெருக்கடியை உருவாக்கியுள்ளது ஒன்றிய அரசு.

டாலருக்கு நிகரான இந்திய ரூபாயின் மதிப்பு 100 ரூபாயை நோக்கி வீழ்ச்சியடைந்து கொண்டிருக்கும் நிலையில், மந்த நிலை ஏற்படுவதற்கான வாய்ப்புகள் உள்ளதாகப் பொருளாதார வல்லுநர்கள் எச்சரிக்கை செய்து வருகின்றனர். இது தொடர்பாக காங்கிரஸ் தலைவர் ராகுல் காந்தி, 'மோடி அரசிடம் முறையான திட்டமோ, தொலைநோக்குப் பார்வையோ இல்லை - வெறும் வெற்றுப் பேச்சுகள் மட்டுமே உள்ளன' என எக்ஸ் தளத்தில் விமர்சனம் செய்துள்ளார்.

'தொழிற்சாலைகளுக்கான எரிபொருள் விலை கடுமையாக உயர்வதும் வெறும் புள்ளிவிவரங்கள் அல்ல; இவை வரப்போகும் பெரும் பணவீக்கத்திற்கான தெளிவான அறிகுறிகள்' எனக் குறிப்பிட்டுள்ள அவர்,

'உற்பத்தி மற்றும் போக்குவரத்து செலவுகள் அதிகரிக்கும்;

குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் மிக மோசமாகப் பாதிக்கப்படும்;

அத்தியாவசியப் பொருட்களின் விலைகள் உயரும்;

அந்நிய நிறுவன முதலீடுகள் வேகமாக வெளியேறும். இதனால் பங்குச் சந்தையில் சரிவு ஏற்படும். அதாவது, ஒவ்வொரு குடும்பத்தின் நிதிநிலையிலும் இதன் நேரடித் தாக்கம் இருக்கும்' என அபாயத்தைச் சுட்டிக்காட்டியுள்ளார்.

ஐந்து மாநில தேர்தல்களைக் காரணமாக வைத்து, பெட்ரோல், டீசல் விலையை ஏற்றாத ஒன்றிய அரசு, தேர்தல் முடிந்தவுடன் பெட்ரோல், டீசல் விலையை உயர்த்த உள்ளது உறுதி. விலையேற்றம் செய்வதைத் தவிர, எதிர்கொண்டுள்ள சவாலை, வரவுள்ள மந்த நிலையைச் சமாளிப்பதற்கான தொலைநோக்கு திட்டம் இல்லை. அதை மடைமாற்ற அவர்களுக்கு இருக்கிறது மதவெறி அரசியல். அது இன்னும் அதள பாதாளத்துக்கு நாட்டை இட்டுச்செல்லும் என்பதே உண்மை.


## ஃப்ளாஷ்பேக்






### கழகத் தலைவரிடம் வாழ்த்து!

2016-ஆம் ஆண்டில், என் தாயார் திருமதி ம.தமிழ்ச்செல்வி அவர்கள் சென்னை, 68-வது வட்ட துணைச் செயலாளராக நியமிக்கப்பட்டபோது, அன்றைய பொருளாளர், இன்றைய கழகத் தலைவர் தளபதி அவர்களை சந்தித்து வாழ்த்துப் பெற்றார். 1986-ஆம் ஆண்டிலிருந்து கழக உறுப்பினராக ஊக்கத்துடன் செயல்பட்டு வந்தவர், அண்மையில் (13.03.2026) மறைந்தார். அவரது கழக உணர்வை என்றென்றைக்கும் சுமப்பதே, எங்கள் குடும்பத்தினர் கொண்டிருக்கும் குறிக்கோள்.



ம.அருண்குமார்

**- 'தீட்டித்தோட்டம்' ம.அருண்குமார்,**
**67-அ, வட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர்,**
**கொளத்தூர் கிழக்குப் பகுதி, சென்னை கிழக்கு.**


இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018.
வாட்ஸ்அப் எண் : 82204-51520
மின்னஞ்சல்: murasolipaasarai@gmail.com

## பாசறை படிப்பறை

கௌதம் ராஜ்

107

**சுயமரியாதை-சமத்துவம்-சமூக நீதி நிரம்பிய உலகைப் படிக்க, படைக்க அவசியமான புத்தகங்களை வாரந்தோறும் அறிமுகம் செய்கிறது இந்தப் பகுதி...**




# சிறுகதைகளின் அரசியல்!

நவீனகாலச் சூழலுக்கு ஏற்ப, ஒரே அமர்வில் குறுகிய காலத்தில் வாசித்து முடிக்கும் வகையில் தோற்றம் பெற்றவை சிறுகதைகள். கதை, நடை, பாத்திரங்கள், கருத்து என அனைத்தும் அந்தத் தன்மையிலானதாக இருக்க வேண்டும் என்பது சிறுகதைக்கான நியதி.

இன்றைக்கும் பொருத்தப்பாட்டுடன் இருக்கும் இந்த வகைமை, தமிழ்ச் சூழலில் எப்படித் தோற்றம் பெற்று வளர்ச்சி அடைந்தது என்பதை அந்தச் சிறுகதைகள் மற்றும் சிறுகதை ஆசிரியர்கள், அரசியல் சார்பு ஆகியவற்றை வாசகர்களுக்குக் கொண்டு சேர்க்கிறது 'தமிழ்ச் சிறுகதையின் தடங்கள்'.

தமிழ்நாடு முற்போக்கு எழுத்தாளர் சங்கத்தின் தலைவரும் எழுத்தாளருமான ச.தமிழ்ச்செல்வன் அவர்கள் எழுதி, பாரதி புத்தகாலயம் வெளியிட்டுள்ளது.

இந்த ஆண்டிற்கான சாகித்ய அகாதமி விருது, இந்நூலுக்காக எழுத்தாளர் ச.தமிழ்ச்செல்வன் அவர்களுக்கு வழங்கப் பட்டுள்ளது.

தமிழ்ச்சிறுகதை உருவாக்கம் பெற்று, முதல் ஐம்பது ஆண்டுகள் எப்படி எல்லாம் வளர்ச்சி பெற்றது என்பதை அறிந்துகொள்ள, இந்நூல் இன்றியமையாத ஒன்று. நூலில், அவர் சிறுகதைகளின் போக்கைக் கீழ்க் கண்டவாறு பகுக்கிறார். 'கலை கலைக்காக' எனச் 'சிறுபத்திரிகைப் பிரிவு', 'கலை விற்பனைக்காக' என்ற 'வெகுஜன பத்திரிகைப் பிரிவு', 'கலை இலக்கியம் யாவும் மக்களுக்கே' என்ற 'இடதுசாரி போக்கு', 'முற்போக்கு முகாம்', அழகியலைவிட கருத்தியலைப் பிரதானமாகக் கருதிய 'திராவிட இயக்கப் பாணி','தலித் இலக்கியம்', 'பெண்ணிய இலக்கியம்', 'பாலியல் சார்ந்த உள்ளடக்கத்தைக் கொண்ட புதிய போக்கு', இவை அனைத்தும் வாசிப்பு வசதிக்காக என்று அவர் வகைமைப்படுத்தியிருக்கிறார்.

திராவிட இயக்க எழுத்தாளர்கள் பற்றி தனி அத்தியாயம் இந்த நூலில் இடம்பெற்றுள்ளது அதில் பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர், இராம.அரங்கண்ணல், ஏ.வி.பி.ஆசைத்தம்பி, சிறுகதை மன்னன் எஸ்.எஸ்.தென்னரசு ஆகியோர் எழுதிய சிறுகதைகளை அறிமுகப்படுத்தி, அது மக்களிடையே ஏற்படுத்திய அரசியல் உணர்வை விளக்கியுள்ளார்.

இந்த நூலில் மொத்தம் அறுபதுக்கும் மேற்பட்ட படைப்பாளிகளை, நூலாசிரியர் அறிமுகம் செய்கிறார். அவர்கள் எழுதிய சிறுகதைகள் கொண்டிருந்த தன்மை, அவர்களின் அரசியல் சார்பு, எழுதிய காலச் சூழல் என மற்ற விவரங்களையும் அறிந்து கொள்ள முடிகிறது. சிறுகதைகள் பற்றிய சில குறிப்புகள், உடனடியாக அவற்றை வாசிக்க வேண்டும் என்ற உணர்வை அளிக்கின்றன.

சமூகத்தில் நிலவிய புறச்சூழல் எப்படிச் சிறுகதைகளின் அகச்சூழலை வடிவமைத்தன என்பதை, இந்த நூலைக் கொண்டு அறிந்துகொள்ளலாம். நூற்றாண்டு காணும் தமிழ்ச் சிறுகதை வடிவத்தின் அரசியலுடன் அதன் வரலாற்றையும் அறிந்துகொள்ள நாம் தவறவிடக் கூடாத நூல் இது.

...வாசிப்போம்.

## கருவூலம்

### 41 தீர்மானங்கள்!

2006-ஆம் ஆண்டில், மார்ச் 3, 4 மற்றும் 5 தேதிகளில், திருச்சியில் கழகத்தின் ஒன்பதாவது மாநில மாநாடு நடைபெற்றது. கலைஞர் தலைமையேற்க, பேராசிரியர் தொடங்கிவைத்தார். தமிழை ஒன்றிய அரசின் ஆட்சி மொழியாக்குவது உள்பட, 41 தீர்மானங்கள் மாநாட்டில் நிறைவேற்றப்பட்டன.

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 28179191, 28179131